**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53

(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.156/2020**

PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | விஜயகுமார் (PW4) | | |
| Father's Name | கந்தசாமி | Calling | |
| Village | தண்டுக்காரன் பாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | 42 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of April 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 04.01.2020 ம் தேதி பகல் 12.00 மணிக்கு மேல் நானும் எனது மாமா மகன் ஜெகநாதனும் லூர்துபுரம் வழியாக சென்று கொண்டிருந்தபோது பிள்ளையார் கோவில் தோட்டம் அருகே போலீசார் இருந்தார்கள். நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டு அருகே சென்று பார்த்தபோது போலீசார் அன்றைய தினம் காலை அந்த இடத்தில் நடந்த வாகன விபத்து சம்பந்தமாக அந்த இடத்தினை பார்த்து மேப் போட்டார்கள். அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் போடும் படி கேட்டதால் நானும், ஜெகநாதனும் கையொப்பங்கள் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் (அசாஆ.2) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நான் சம்பவ இடம் செல்லும்போது மதியம் 12 மணி இருக்கும். சம்பவத்தில் ஈடுபட்ட பைக் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இல்லை. உதிரி பாகங்கள் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இருந்தது. உதிரி பாகங்களை போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. போலீசார் வரைந்த வரைபடத்திற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் அதனால் தான் சம்பவ இடத்தில் இருந்த உதிரிபாகங்கள் எனக்கு தெரியவில்லை என்றும் அதனால் தான் நான் முன்னுக்கு பின்முரணாகச சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |